# வாலிபமும், வயோதிபமும்

(பிரசங்கி 12:1-14)



பாஸ்டர். டேவிட் T.

# வாலிபமும், வயோதிபமும்

*பிரசங்கி 12:1-14*

## வசனங்களுக்கான விளக்கம்


எழுத்தாக்கம்:


**Pastor. David. T**



**Word of God Church**
**Doha - Qatar.**
**Mobile: +974-5526-4318**
**www.wogim.org**

அன்பிற்குரியவர்களே,

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த சிறு புத்தகத்தின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி. சத்திய வேதமாகிய பைபிளில் பிரசங்கி 12 ஆம் அதிகாரத்தில் 1 முதல் 14-ஆம் வசனம் வரையிலுமான வசனங்களில் அரசன் சாலமோனின் வார்த்தைகளின் அர்த்தம் மற்றும் விளக்கத்துடன் இந்த புத்தகம் வெளியிடப்படுகிறது. இந்த சிறு புத்தகத்தை வாசியுங்கள். தியானியுங்கள். மற்றவர்களுக்கும் பகிர்ந்துகொள்ளுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.



# வாலிபமும், வயோதிபமும்
## (பிரசங்கி 12:1-14)

பிரசங்கி புத்தகம் சாலோமோன் இராஜாவால் எழுதப்பட்டது. சாலோமோன் பெரிய ஞானி, அறிவில் சிறந்தவர். இருபது வயதில் எருசலேமில் இராஜாவானார். நாற்பது வருடம் அரசாண்டார். சாலோமோனை போன்ற ஞானவான் ஒருவனும் பூமியில் அவனுக்கு முன்னும் இருந்ததில்லை, அவனுக்கு பின்பும் எழும்பினதுமில்லை. அவ்வளவு ஞானத்தைத் தேவன் சாலோமோனுக்கு கொடுத்திருந்தார். ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன், இதிலே உனக்குச் சரியானவன் உனக்குமுன் இருந்ததுமில்லை, உனக்குச் சரியானவன் உனக்குப்பின் எழும்புவதுமில்லை (1 இராஜா. 3:12).

அவன் மகா ஐசுவரியவானுமாய் காணப்பட்டான். சாலோமோனின் நாட்களில் வெள்ளி ஒரு பொருட்டாய் எண்ணப்படவில்லை. சாலோமோனுக்கு 700 மனைவிகளும், 300 மறுமனையாட்டிகளும் இருந்தார்கள். நாள் ஒன்றிற்கு சாலொமோனுக்குச் செல்லும் சாப்பாட்டுச் செலவு, முப்பது மரக்கால் மெல்லிய மாவும், அறுபது மரக்கால் மாவும், கலைமான்களையும் வெளிமான்களையும் வரையாடுகளையும் கொழுமையான பறவைகளையும் தவிர, கொழுக்கப்பட்ட பத்து மாடுகளும், மேய்ச்சலிலிருந்து வந்த இருபது மாடுகளும் நூறு ஆடுகளுமாம் (1 இராஜா. 4:22,23). உலகப் பிரசித்தி பெற்ற எருசலேம் தேவாலயத்தைக் கட்டினார். அவர் கண் இச்சித்ததையும், அவர் இருதயம் விரும்பினதையும் ஒன்றையும் அவர் பெற்றுக்கொள்ளாமல் இருந்ததில்லை. இவ்வளவு ஐசுவரியமான மனிதன், சபைக்கு எழுதின இந்த பிரசங்கி புத்தகத்தில் "**மாயை மாயை எல்லாம் மாயை**" என்று சொல்லுகிறார். **பிரசங்கி 12-ஆம் அதிகாரத்தில் வயோதிபத்தின் அவலநிலையைப் பாடல் நடைமுறையில் அழகாக எழுதி, அப்படிப்பட்ட நிலைமை வருவதற்கு முன்பு வாலிபத்திலே சிருஷ்டிகரை நினைக்கவேண்டும் என்று ஆலோசனை கூறுகிறார்.**

சாலொமோன், வாலிபத்தில் கர்த்தருடைய கட்டளையின் படி வாழ்க்கையை ஆரம்பித்தாலும், வயது சென்றபோது அவனுடைய இருதயம் வழுவிப்போயிற்று. அதற்குக் காரணம், இஸ்ரவேல் ஜனங்கள் புறஜாதிகளிலிருந்து பெண்கொள்ளக் கூடாது என்று தேவன் கட்டளையிட்டிருந்தார். ஆனால் சாலொமோன் அனேக புறஜாதி ஸ்திரீகளை மணந்தார். அவனுடைய மனைவிகள், **அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்.** அதன் மூலம் அந்நிய தேவர்களுக்குப் பலியிடுகிறவனாக மாறிவிட்டான். வயது சென்ற பின்பு தான் கடந்து வந்த பாதை தேவனுக்குப் பிரியமில்லை என்று புரிந்துகொள்ளுகிறார். ஆகையால் தான் வாலிப பிராயத்தில் சிருஷ்டிகரை நினை என்ற மிக முக்கிய ஆலோசனையைக் கூறுகிறார். வயது ஆகும் போது தீங்கு நாட்கள் வருகிறது, எப்போது மரணம் வரும் என்று தெரியாது. ஆண்டவருக்கு என்று எதுவும் செய்ய முடியாது. வீணடித்த காலங்கள் ஒருபோதும் திரும்பவும் வராது. எவ்வளவு ஐசுவரியங்கள் காணப்பட்டாலும், எவ்வளவு இந்த உலகத்தை அனுபவித்தாலும் அவைகள் யாரையும் நித்தியத்திற்குக் கொண்டு போய் சேர்ப்பதுமில்லை..

### வாலிபத்தில் சிருஷ்டிகரை நினை (பிர. 12:1)

வாலிப நாட்களில் **முதலாவது** நாம் அறிந்துகொள்ள வேண்டிய காரியம் நமக்கு ஒரு சிருஷ்டிகர் உண்டு. நம்முடைய சரீரங்களில் காணப்படுகிற ஒவ்வொரு அவயவங்களையும் நேர்த்தியாய் உருவாக்கியவர் ஒருவர் உண்டு. தாயின் கர்ப்பத்திலே நம்மை விசித்திர விநோதமாய் சிருஷ்டித்தவர் ஒருவர் உண்டு. நமக்குள்ளாய் தன் ஜீவ சுவாசத்தையும், ஆத்துமாவையும் வைத்தவர் ஒருவர் உண்டு. அழகான சரீரத்தைக் கொடுத்தவர் உண்டு. அவர் நம்மைச் சிருஷ்டித்தவர் என்றால் அவரே நம்முடைய உரிமையாளர், அவரே நம்முடைய ஆண்டவர், அவரே நம்மை ஆளுகிறவராகக் காணப்படவேண்டும். நாம் நமக்குரியவர்கள் அல்ல. ஆண்டவரே நம்முடைய சொந்தக்காரர்.

"**சிருஷ்டிகர்**" என்ற பதம் மூல பாஷையாகிய எபிரேய வேதாகமத்தில் பன்மையில் வருகிறது. அது திரியேக தேவன் நம்மைச் சிருஷ்டித்தவர் என்று அர்த்தமாகிறது. நமது (let us) சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக (ஆதி. 1:26) என்பதாக.

**இரண்டாவது,** நம்முடைய சிருஷ்டிகரை வாலிபத்தில் நினைக்கவேண்டும். ஆண்டவரை நினைத்து சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வதற்கு நல்ல காலம் உண்டு என்றால் அது வாலிபம் ஆகும். ஒரு கணக்கு கூறுகிறது கிறிஸ்துவுக்குள்ளாய் வருகிறவர்களில் 100 சதவிகிதத்தில் 95 சதவிகிதம் பேர் 50 வயதிற்குள்ளாக வருகிறார்கள். அதிலும் 30 வயதிற்குள்ளாய் வருகிறவர்கள் தான் அதிகம். ஆம் கர்த்தர் கொடுத்த வாலிப நாட்களில் சிருஷ்டிகரை நினைக்க வேண்டும்.

**ஏன் நாம் வாலிபத்தில் சிருஷ்டிகரை நினைக்க வேண்டும்?**

வாலிபர்கள் ஆண்டவருடைய கரங்களில் காணப்படுகிற அம்புகள் (சங்.127:4). வாலிபப்பிராயம் நல்ல பெலன், ஆரோக்கியம் உள்ள நாட்கள். அந்நாட்களை ஆண்டவருக்கு என்று கொடுக்கவேண்டும். வாலிபத்தில் ஆண்டவரை நினைப்பது மாத்திரமல்ல, அவருக்கென்று ஏதாகிலும் செய்ய வேண்டும். வேதத்தில் பார்க்கும் போது அனேகர் வாலிபத்திலே ஆண்டவருக்கு தங்கள் வாழ்க்கையை ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள். மாத்திரமல்ல அனேக வாலிபர்களுடைய வாழ்க்கை நமக்குச் சவாலாகக் காணப்படுகிறது, முன்னுதாரணமாகக் காணப்படுகிறது.

வாலிபத்தில் பரிசுத்தமாய் ஜீவிக்க முடியும் என்பதற்கு யோசேப்பு எடுத்துகாட்டாகக் காணப்படுகிறார். அவர் தேவனுக்குப் பயந்ததினாலே போத்திபாரின் மனைவியின் இச்சை வலைக்கு விலகி ஓடினார். உலக போஜனங்களாலும், பானங்களினாலும் தங்களை அசுத்தப்படுத்தாததற்கு தானியேல், அனனியா, மீஷாவேல், மற்றும் அசரியா போன்ற வாலிபர்களை முன்னுதாரணமாகக் கொள்ளலாம்.

வாலிபத்திலே சங்கீதங்களைப் பாடி தியான புருஷர்களாய் காணப்படலாம் என்பதற்கு தாவீது எடுத்துக்காட்டாகக் காணப்படுகிறார்.

**எல்லாருக்கும் மேலாக மனுஷகுமாரனாய் காணப்பட்ட இயேசு, என்னிலே பாவம் உண்டென்று உங்களில் யார் கூறமுடியும் என்று வாலிபத்திலே சவால் விட்டார்.**

இன்று உலகத்தின் அதிபதியாகிய பிசாசு, வாலிபர்களை உலக சினேகிதத்திற்கு நேராக, மாம்ச இச்சைகளுக்கு நேராக, மது மயக்க மருந்துகளுக்கு நேராக, நாகரீகம் என்று கூறி அசுத்தமான பழக்கவழக்கங்களுக்கு நேராக இழுத்துக் கொண்டிருக்கிறான். ஆனால் நம்முடைய சிருஷ்டிகரோ அவரை நினைக்கும்படிக்கு அழைக்கிறார். அவரைக் கவனித்து பார்க்கும்படிக்கு அழைக்கிறார். அவருக்காக வாலிபத்தைக் கொடுக்கும் படி விரும்புகிறார். இச்சைகளுக்கு விலகி ஓடும்படி அழைக்கிறார். வாலிபர்களே செவி சாய்ப்பீர்களா?

## ஏன் வேதம் நம்மை வாலிபத்தில் தேவனை நினைக்கும்படி துரிதப்படுத்துகிறது?

வாலிபத்திற்குப் பின்பு வயோதிபம் வருகிறது. அவைகள் தீங்கு நாட்கள், ஒருவரும் பிரியப்படாத நாட்கள், ஆண்டவருக்கென்று ஒன்றும் செய்யக்கூடாத நாட்கள், வியாதியாகிய தீங்கு நம்மைத் தாக்குகிற நாட்கள், கைவிடப்படுகிற நாட்கள், நேசிப்பாரற்ற நாட்கள், அப்படிப்பட்ட நாட்கள் வருவதற்கு முன்பு ஆண்டவரைக் சொந்த இரட்சகராகக் கண்டுகொள்ள வேண்டும்.

## வயோதிபத்தின் அவலம் (பிர. 12:2-7)

**சூரியனும், வெளிச்சமும், சந்திரனும், நட்சத்திரங்களும், அந்தகாரப்படாததற்குமுன்னும்:**

சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும் இயற்கையாக வெளிச்சம் வீசக்கூடியவை. அவைகள் வாலிபத்தின் செழிப்புள்ள,

மகிழ்ச்சியான, கொழுத்த, அதிக ஞானமாய் சுடர் விடுகிற விளக்கைப் போல ஜீவிக்கிற நாட்களைக் குறிக்கிறது. பிரகாசமான நாட்களைக் குறிக்கிறது. நாட்கள் கடந்து செல்லச் செல்ல, வயது ஆக ஆக, இவை கொஞ்சம் கொஞ்சமாக அந்தகாரப்பட்டு போகிறது. அப்படிப்பட்ட நாட்கள் வருவதற்கு முன்பு ஆண்டவரை நினைக்கவேண்டும்.

**மழைக்குப்பின் மேகங்கள் திரும்பத் திரும்ப வராததற்கு முன்னும்:**

மழைக்கு முன்பு மேகங்கள் எழும்பும். மேகங்கள் கூடும்போதே மழை வரும் என்பதைப் புரிந்துகொள்கிறோம். மழைக்குப் பின்பு வசந்த காலம் வருகிறது. அது துளிர்விடும் காலம், குருவிகள் பாடும் காலம், புறாக்களின் சத்தம் கேட்கிற காலம், வாலிபமும் துளிரைப்போலத் தளிர்த்து அனேக காரியங்களைச் சாதிக்கிற நாட்கள், அனேகரை நம் நிழலின் கீழ் வந்தடையச்செய்கிற நாட்கள், ஆனால் வசந்த காலத்திற்குப் பின்பு இலையுதிர் காலம் வருகிறது. வயோதிபமும் இலையுதிர் காலத்தைப் போன்றது. இலை உதிர்ந்த மரத்திலே பறவைகள் கூடு கட்டுவதில்லை, யாரும் தஞ்சம் அடைவதுமில்லை. அப்படிப்பட்ட நாட்கள் கடந்து வருவதற்கு முன்பு சிருஷ்டிகரை நினைக்க வேண்டும்.

**வீட்டுக் காவலாளிகள் தள்ளாடி:**

கைகளும் கால்களும் தான் வீட்டுக் காவலாளிகள், பலசாலிகள், நம்மைத் தற்காத்து கொள்ளுகிறவை. குடும்பத்தைப் போஷிப்பதற்கு வேலை செய்கிறவை, பாதுகாத்து பராமரிக்கிறவை. வயோதிபம் வரும்போது இவை தள்ளாடத் துவங்கும், பெலன் குறுகிப்போகத் துவங்கும். அப்படிப்பட்ட நாட்கள் கடந்து வருவதற்கு முன்பு சிருஷ்டிகரை நினைக்க வேண்டும். பலமுள்ள நாட்களில் ஆண்டவருக்கு வாழ்க்கையை அர்ப்பணித்தால் பலவீன நாட்களில் உங்களைத் தூக்கிச் சுமப்பார். அவருடைய கரங்கள் ஒருபோதும் தள்ளாடுவதில்லை, நீதியின் கரத்தினால் உங்களைத் தாங்குவேன் என்று வாக்களித்திருக்கிறார்.

**பலசாலிகள் கூனிப்போய்:**

முதுகு தண்டுவடத்தைக் குறிப்பதாகக் காணப்படுகிறது. தண்டுவடம் வாலிபத்தில் திடமாகக் காணப்படும். ஆகையால் தலைநிமிர்ந்து நடக்கிறோம், பராக்கிரமசாலிகளாய் காணப் படுகிறோம். ஆனால் வயதாகும்போது, கொஞ்சம் கொஞ்சமாகக் கூனிப்போகத் துவங்கும், பெலன் குறுகிப்போகத் துவங்கும், கோலின் உதவியை நாடுவோம், ஒருவரும் இந்த நிலையிலிருந்து தப்பிச்செல்ல முடியாது. அப்படிப்பட்ட நாட்கள் கடந்து வருவதற்கு முன்பு சிருஷ்டிகரை நினைக்க வேண்டும்.

**எந்திரம் அரைக்கிறவர்கள் கொஞ்சமானதினால் ஓய்ந்து:**

எந்திரம் அரைக்கிறவர்கள் பற்கள், வாலிபத்திலே எந்த திடமான உணவையும் கடித்து அரைத்துச் சாப்பிடும். ஆனால் வயது ஆகும் போது ஒன்றன்பின் ஒன்றாகப் பற்கள் விழுந்து போகும். அரைக்கிற சத்தம் குறைந்து போகும். விரும்புகிற உணவு வகைகளைச் சாப்பிட முடியாது. அப்படிப்பட்ட நாட்கள் வருவதற்கு முன்பாக நாம் சிருஷ்டிகரை நினைக்கவேண்டும்.

**பலகணி வழியாய்ப் பார்க்கிறவர்கள் இருண்டுபோகிறதற்கு முன்னும்:**

பலகணி வழியாய் பார்க்கிறவர்கள் கண்கள். வாலிபத்தில் தெளிவான பார்வை உடையவர்களாய் காணப்படுவோம். வயோதிப நாட்களில் அவைகள் இருளடைய ஆரம்பிக்கிறது. வாசிக்க முடியாத, பார்க்க முடியாத சூழ்நிலை உருவாகிறது. தெளிந்த பார்வை உடைய நாட்களில் வேதத்தை வாசிப்போம், தியானிப்போம், கீழ்ப்படிவோம். வெளி. 1:3 கூறுகிறது, கர்தருடைய வார்த்தையை வாசிக்கிறவன் பாக்கியவான் என்பதாக.

**ஏந்திர சத்தம் தாழ்ந்ததினால் தெருவாசலின் கதவுகள் அடைபட்டு:**

வாயின் கதவு உதடுகளாகக் காணப்படுகிறது. உதடுகள் அழகாகக் காணப்படவேண்டும் என்றால் ஊனும் பற்களும்

சரியாக காணப்படவேண்டும். பற்கள் எல்லாம் விழுந்து போனபின்பு தானாகவே உதடுகள் ஒட்டிப்போய்விடும், தானாகவே அடைபட்டு விடும். புன்சிரிப்பு, புன்னகை, அற்றுப்போகிறது. அப்படிப்பட்ட நாட்கள் வருமுன் நாம் சிருஷ்டிகரை நினைக்க வேண்டும்.

**குருவியின் சத்தத்துக்கும் எழுந்திருக்க வேண்டியதாகி:**

பிள்ளைகளாய், வாலிபராய் காணப்படும் போது, தூக்கம் இன்பமாகக் காணப்படும். என்ன சத்தங்கள் கேட்டாலும் தூக்கம் கலைவதில்லை. ஆனால் வயோதிபத்தில் சிறிய சலனங்கள் இருந்தாலும் தூக்கம் கலைந்துவிடும். குருவியின் சத்தமும் தூக்கத்தைத் கலைத்து விடும். அதுபோன்ற நாட்கள் வருவதற்கு முன்பு நாம் சிருஷ்டிகரை நினைக்கவேண்டும்.

**கீதவாத்தியக் கன்னிகைகளெல்லாம் அடங்கிப்போகாததற்கு முன்னும்:**

வாலிபத்தில் குரல் வளம் நேர்த்தியாகக் காணப்படும். பேச்சில் தெளிவு காணப்படும். பல தாளங்களில் பாடல்களைப் பாடி மகிழலாம். வயோதிபத்தில் குரல் வளம் குன்றிப்போகும். வார்த்தைகளில் தெளிவு காணாது. மாத்திரமல்ல கீதவாத்தியங்களை கேட்டு ரசிக்கிற காதுகளின் திறனும் குன்றிப் போகும்.

**நல்ல குரல் வளத்தைப் பெற்றிருக்கிற<br>வாலிப நாட்களில் ஆண்டவருக்காய்<br>பேசுவோம், பாடுவோம்.<br>ஆண்டவருடைய சத்தத்திற்கு நேராகச்<br>செவியைச் சாய்ப்போம்.**

**மேட்டுக்காக அச்சமுண்டாகி, வழியிலே பயங்கள் தோன்றி:**

வயோதிபத்தில் பயம் அதிகமாகக் காணப்படுவது இயற்கையே. கை கால்கள் தள்ளாடி பலசாலிகள் கூனிப்போய் காணப்படும்போது பயம் உண்டாகிறது. படிகள் ஏறுவதற்குப் பயம்,

தெருக்களில் போவதற்குப் பயம், வாகனங்களைக் கண்டு பயம், பிள்ளைகள் பராமரிப்பார்களோ என்ற பயம். ஆக வயோதிபம் வரும் போது பயம் அதிகம் காணப்படும். அப்படிப்பட்ட நாட்கள் வருவதற்கு முன்பு நாம் ஆண்டவரை நினைக்க வேண்டும்.

**வாதுமை மரம் பூப்பூத்து:**

வாதுமை மரம் பூப்பூப்பது, வயோதிபத்தில் முடிகள் நரைத்துப் போய்விடுவதற்கு அடையாளம். இளமையில் பலவித சிகை அலங்காரங்கள் செய்யலாம். வயோதிபம் வரும்போது முடிகளில் காணப்படுகிற செழிப்பு போய், வாடிப்போன பயிரைப்போல நரைத்துக் காணப்படும். அப்படிப்பட்ட காலங்கள் வருமுன் ஆண்டவரை நினைக்கவேண்டும்.

**வெட்டுக்கிளியும் பாரமாகி:**

வெட்டுக்கிளிகள் மிகவும் சிறிய பறவை. வயது ஆகும் போது இலகுவான காரியங்கள் கூட பாரமாக மாறிவிடுகிறது. வாலிபத்தில் தூக்கிச் சுமந்த எந்த பொருட்களையும் தூக்க முடியாது. மாத்திரமல்ல வேதம் கூறுகிறது யோவான் ஸ்நானகனுடைய உணவு வெட்டுக்கிளியாகக் காணப்பட்டது. சிறிய உணவும் கூட வயிற்றுக்குப் பாரமாகப் போய்விடும். அதற்கு முன்பு நாம் சிருஷ்டிகரை நினைக்கவேண்டும்.

**பசித்தீபனமும் அற்றுப்போகாததற்கு முன்னும் (Before desire fails):**

வாலிபத்தில் விதவிதமான உணவுகளின் மேல் விருப்பம் காணப்படும். வயோதிபத்தில் அப்படிப்பட்ட ஆசைகள் அற்றுப் போகிறது. ஜீரண சக்தியானது குறைந்து போகிறது. மற்ற சரீர ஆசைகளும் அற்றுப்போகும். அப்படிப்பட்ட சூழ்நிலைகள் வருவதற்கு முன்பு ஆண்டவரை நினைக்கவேண்டும்.

**மனுஷன் தன் நித்திய வீட்டுக்குப் போகிறதினாலே துக்கங் கொண்டாடுகிறவர்கள் வீதியிலே திரியாததற்கு முன்னும்:**

ஒவ்வொரு மனுஷனுக்கு முன்பும் இரண்டு நித்திய வீடுகள் உண்டு. ஒன்று நித்திய மோட்சம், மற்றொன்று நித்திய நரகம். இரண்டில் ஒன்றில் மனுஷன் நிச்சயமாகச் சென்றே ஆகவேண்டும். மனுஷன் மரித்து போன பின்பு துக்கங்கொண்டாடுகிற உறவினர்கள் அழுவார்கள். ஆனால் மனுஷனுக்கு மரணம் கடைசி அல்ல. அதன் பின்பு அவனுக்கு நித்திய வாழ்வு உண்டு. நாம் ஜீவிக்கும்போது எடுக்கிற தீர்மானம் தான் அதை நிர்ணயிக்கிறது. ஒரு ஆத்துமா கிறிஸ்து இல்லாமல் மரிக்கும் போது பரலோகம் துக்கிக்கும். இலவசமான இரட்சிப்பையும், கிருபையாய் கொடுத்த நாட்களையும் உதாசீனப் படுத்தியதால் ஆண்டவர் துக்கப்படுவார். ஆனால் பாதாளம் சந்தோஷப்படும். சத்துரு மகிழுவான்.

**வெள்ளிக்கயிறு கட்டுவிட்டு:**

மரணம் சம்பவிக்கும்போது என்ன நடக்கிறது? மரிக்கும் போது சரீரம் எப்படி மாறிவிடுகிறது? கயிற்றைப் போலப் பிணைக்கப்பட்டுள்ள நரம்புகள் எல்லாம் கட்டுவிட்டுப்போகிறது. மூளையோடு காணப்படுகிற தொடர்பு அற்றுப்போகிறது.

**பொற்கிண்ணி நசுங்கி:**

மண்டை ஓடு கிண்ணத்தைப் போலக் காணப்படுகிறது. மண்டை ஒட்டிற்குள் காணப்படுகிற மூளை, முகுளம் போன்ற பாகங்கள் மரித்தவுடன் சுருங்கிப் போகிறது, செயலற்று போகிறது. மூளையின் சிறு பகுதி செயலற்றாலே சம்மந்தப்பட்ட சரீரத்தின் எல்லா பாகங்களும் செயலற்று போய்விடும்.

**ஊற்றின் அருகே சால் உடைந்து, துரவண்டையில் உருளை நொறுங்கி:**

சரீரத்தின் ஊற்று இருதயமாய் காணப்படுகிறது. இந்த இருதயம்தான் சரீரம் முழுவதும் இரத்தத்தை அனுப்புகிறது.

இருதயம் ஒரு நொடி நிற்குமே என்றால் மரணம் வரும். நீர் ஊற்றிலிருந்து வருகிற நீரைத் துரவு சுமந்து செல்லுகிறதைப் போல, இருதயம் இரத்தத்தை ஊற்றிவிடும்போது சரீரத்தின் எல்லா பாகங்களுக்கும் இரத்த நாளங்கள் சுமந்து செல்லுகிறது. மரிக்கும் போது உடைந்து நொறுங்கிப்போகிறது, செயலற்றுபோகிறது. இன்று இருதய சம்பந்தப்பட்ட நோய்களில் மரிப்பவர்கள்தான் அதிகம். மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது என்று லேவி. 17:11 கூறுகிறது. ஒரு நிமிடம் இரத்த ஓட்டம் நின்றால் கூட மரணம் உறுதி. அப்படிப்பட்ட மரண நாட்கள் வருவதற்கு முன்பு சிருஷ்டிகரை நினைக்கவேண்டும்.

## மண் மண்ணுக்குத் திரும்பும் (பிர.12:7)

சரீரமானது பூமிக்குத் திரும்பும் என்று எழுதப்படவில்லை. மண்ணானது பூமிக்குத் திரும்பும் என்று எழுதப்பட்டிருக்கிறது. வேதம், சரீரத்தை மண் என்று அழைக்கிறது. ஆதியிலே தேவன் மனுஷனை மண்ணினால் உருவாக்கி, அவனுடைய நாசியிலே ஜீவ சுவாசத்தை ஊதினார். மனுஷன் ஜீவ ஆத்துமாவானான். ஆதாம் பாவம் செய்த போது, ஆண்டவர் கூறினார், நீ மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய். இன்று நம்முடைய அலங்கரிப்பெல்லாம் மண்ணானதும், மண்ணுக்குத் திரும்புகிற சரீரத்திற்கும் தான். மனுஷன் மண்ணென்று ஆண்டவர் நினைவுகூருகிறார்.

ஆனால், ஆவி தன்னை தந்த தேவனிடத்திற்கு போகும். உயர ஏறும் மனுஷனுடைய ஆவியையும், தாழப் பூமியிலிறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்? (பிர. 3:1). ஒவ்வொரு மனுஷனுடைய ஆவியும் தேவனுடையது. காரணம் அவரே அந்த ஆவியை மனுஷனுக்குள் வைத்தார். அந்த ஆவியில்தான் தேவனும் வாசம் பண்ணுகிறார். மனுஷனுடைய ஆவிதான் தேவன் தங்குகிற ஆலயம். துன்மார்க்கனும், சன்மார்கனும் யார் மரித்தாலும் அவனுடைய ஆவி தேவனிடத்திற்கு போகும். ஆத்துமா நித்தியத்தை நிர்ணயிக்கும், நித்திய வீட்டை நிர்ணயிக்கும். மண்ணான சரீரம் மண்ணுக்குத் திரும்புவதற்கு முன்பு நாம் சிருஷ்டிகரை நினைக்க வேண்டும்.

வாழ்கையை ஓடி முடித்தபிறகு அல்ல, 50, 60, வயதான பிறகு அல்ல வாலிபத்திலே நாம் நம்முடைய ஆண்டவரை நினைக்க வேண்டும். இதைக் கண்டுகொள்ளுகிற மனுஷன் பாக்கியவான். தீங்கும், உபத்திரவமும் நிறைந்த வயோதிபத்திற்கு முன்பு வாலிபத்தை ஆண்டவருக்கு சமர்ப்பிக்கிற மனுஷன் பாக்கியவான்.

### எல்லாம் மாயை (பிர.12:8)

கண்ணால் காண்பது மாயை, காதால் கேட்பது மாயை, உலகமும் அதின் ஆசை இச்சைகளும் மாயை. உலகம் நிலையற்றது, வாழ்க்கை நிலையற்றது, எல்லாம் மாயை. "**மாயை**" என்ற பதம் பழைய ஏற்பாட்டில் 37 முறை வருகிறது. அவற்றுள் பிரசங்கியில்தான் அதிக இடத்தில் வருகிறது. எல்லாம் மாயை என்று கூறுவது சாதாரண நபரல்ல. சமஸ்த இஸ்ரவேலின் இராஜா. வாழ்க்கையை எல்லா விதங்களிலும் அனுபவித்தவர். சங்கீதம் 144:4 கூறுகிறது, மனுஷன் மாயைக்கு ஒப்பாயிருக்கிறான், அவன் நாட்கள் கடந்துபோகிற நிழலுக்குச் சமானம். இளவயதும் வாலிபமும் மாயை (பிர. 11:10). அழகு மாயை (நீதி. 31:30).

உலக இன்பம் மாயை (பிர. 2:1). உலக வேலைகள் மாயை(பிர. 2:11). எல்லா உலக காரியங்களும் மாயை(பிர.1:2) என்பதாக.

### வாலிபனே புத்தியடைவாயாக (பிர. 12:9-12)

பிரசங்கியாகிய சாலோமோன் ஞானவான். அவன் ஜனத்திற்கு அறிவை போதிக்க விரும்பி கவனமாய் கேட்டு வாழ்க்கையை ஆராய்ந்து எழுதின வார்த்தைகள் இவைகள். அவன் எழுதின வாக்கியங்கள் எல்லாம் செவ்வையும் சத்தியமுமானவைகள். இந்த வார்த்தைகள் ஞானிகளின் தேவனால் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. நல்ல மேய்பனால் கொடுக்கப்பட்டது. இவைகள் கொடுக்கப்பட்டதின் நோக்கம் நம்முடைய இருதயத்தில் பசுமரத்தாணிபோல அறையப்பட வேண்டும், பதிக்கப்படவேண்டும் என்பதற்காக. என் வார்த்தை

அக்கினியைப்போலும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப்போலும் இருக்கிறதல்லவோ? என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே. 23:29).

தேவனுடைய வார்த்தையானது
ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும்,
இருபுறமும் கருக்குள்ள
எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும்,
ஆத்துமாவையும் ஆவியையும்,
கணுக்களையும் ஊனையும்
பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும்,
இருதயத்தின் நினைவுகளையும்
யோசனைகளையும் வகையறுக்கிறதாயும்
இருக்கிறது (எபி.4:12).

அவருடைய வார்த்தையில் நாம் தேறினவர்களாய் காணப்பட்டு, நித்தியத்தை ஆதாயப்படுத்திக்கொள்வோம். வேத புத்தகத்திற்கு மேலான புத்தகம் ஒன்றும் இல்லை. ஆகையால் முதலில் இதில் தேறுவோம். மற்ற புத்தகங்கள் படிப்பது நல்லது. ஆனால் அவைகளே நம்முடைய வாழ்க்கையாக மாறிவிடக் கூடாது. கிரகிக்க கூடாததை படிப்பதின் மூலம் இளைப்பு கடந்து வருகிறது என்று வேதம் கூறுகிறது. ஆனால் வேதத்தைத் தியானிக்கிறவனுக்குத் தேவன் இளைப்பாறுதலைக் கட்டளையிடுகிறார்.

## தேவனுக்குப் பயப்பட வேண்டும் (பிர.12:13,14)

தேவனுக்குப் பயப்படுகிற ஜீவியம் வாலிபத்தின் நோக்கமாகக் காணப்பட வேண்டும். தேவனுக்குப் பயப்படுவது என்பது அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு ஜீவிப்பதாகும். கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம். கடைசி நாட்கள் தேவ பயமற்ற சந்ததி உருவாகிக் கொண்டிருக்கிற நாட்கள். பிள்ளைகள், வாலிபர்கள் மத்தியில் தேவனுக்குப் பயப்படுகிற பயம் இல்லை. தேவன் உண்டோ என்று கேட்கிற மதிகேடர்கள் பெருகிப்போன நாட்கள். அநீதிகளின் தண்டனை உடனடியாக வராதினாலே

மனுப்புத்திரரின் இருதயம் நியாயக்கேடு செய்வதற்கும் தேவபயம் இல்லாமல் ஜீவிப்பதற்கும் துணிகரங் கொண்டிருக்கிற நாட்கள் இவை. ஆனால் வேதம் ஒவ்வொரு மனுஷனும் தேவனுக்குப் பயப்படவேண்டும் என்று கட்டளை கொடுக்கிறது. அதுவே அனைவரின் கடமை என்றும் ஆலோசனைக் கூறுகிறது.

மாத்திரமல்ல ஒவ்வொருவருடைய கிரியையும், அந்தரங்கமான காரியங்களையும் தேவன் அறிவார், நியாயத்திலே கொண்டு வருவார். வாலிபனே உன் சிந்தனையைத் தேவன் அறிவார்.

**வாழ்க்கையை ஓடி முடித்த பின்பு ஆண்டவருக்குள் வரலாம் என்று தீர்மானித்து, ஓடிக்கொண்டிருக்கிற மனுஷரே உங்கள் இருதயத்தின் இரகசியங்களைத் தேவன் அறிவார்.** புத்தகமே வாழ்க்கை, படிப்பே எல்லாம் என்று போதித்து தாங்கள் பிள்ளைகளை வேதத்தையும் ஆராதனைகளையும் மறக்கும்படி செய்கிற பெற்றோரே, நீங்களும் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

**கிருபை**
**உங்களோடிருப்பதாக**
**ஆமென்.**

“பிள்ளைகளே, வாலிபர்களே
உங்கள் வாழ்க்கையை பரம குயவனின்
கையில் ஒப்புக்கொடுங்கள்.
அவருக்கு சித்தமானபடி உங்களை
வனைய ஒப்புக்கொடுங்கள்.
உங்களை விலையுயர்ந்த
பாத்திரமாய் வனைவதற்கு
அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.
கிருபை உங்களோடு இருப்பதாக,
ஆமென்!”




**Pastor. David T.**
**Word of God Church**
**Doha - Qatar**
**Mob. +974 5526 4318**

www.wogim.org
www.uthamiyae.fm
www.uthamiyae.tv
www.manna.today